# *Maggi* இப்புத்தாண்டில் இலங்கை இல்லத்தரசிகளை மகிழ்விக்கின்றது

30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்தினதும் நம்பிக்கைக்குரிய விருப்பத்தெரிவாக உள்ளதுடன், இலங்கையில் அனைவராலும் மிகவும் நேசிக்கப்படுகின்ற உணவு வர்த்தகநாமமான *Maggi*, இந்த பண்டிகை காலத்தில் இலங்கையிலுள்ள இல்லத்தரசிகள் தமது வீடுகளில் பாரம்பரியமான புத்தாண்டு உணவு வகைகளைத் தயாரிப்பதற்கு அவர்களை மகிழ்விக்கின்றது.

இந்த புத்தாண்டு பிரச்சாரத்தின் போது, சுவையான புத்தாண்டு உணவு வகைகளை எவ்வாறு தயாரிப்பது என்பதை இல்லத்தரசிகளுக்கு கற்றுத்தருவதற்காக, சுவர்ணவாஹினி தொலைக்காட்சி அலைவரிசையில் "*Maggi* Samaga Avurudu Kema" (*Maggi* உடன் புத்தாண்டு உணவு) என்ற நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பாரம்பரியமான புத்தாண்டு உணவு வகைகளை தயாரிக்கும் போது சமையலுக்கு உதவும் பல்வேறு உற்பத்திகளை *Maggi* கொண்டுள்ளது. புத்தம்புதிய, உயர் தரம் கொண்ட இலங்கை தேங்காய்களிலிருந்து தயாரிக்கப்படுகின்ற *Maggi* தேங்காய் பால்மாவைக் கொண்டு பாற்சோறு (கிரிபத்) போன்ற பிரபலமான புத்தாண்டு உணவு வகைகளை தயாரிக்க முடியும். இலங்கையில் உணவில் சுவையூட்டியாக, அனைத்து தேவைகளுக்கும் உபயோகிக்கப்படக்கூடிய *Maggi* Rasamusu, புத்தாண்டின் போது வீடுகளுக்கு வருகை தருகின்ற உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சுவையான சோறு மற்றும் கறி வகைகளை தயாரிப்பதற்கு இல்லதரசிகளுக்கு உதவுகின்றது.

மேலும், இந்த பண்டிகைக் காலத்தில் இலங்கை நுகர்வோருக்கு பெறுமதிமிக்க பரிசுகளை வழங்கி, அவர்களுக்கு வெகுமதியளிப்பதற்கு, தெரிவு செய்யப்பட்ட நகரங்களில், உற்பத்தி மாதிரிகளை விநியோகித்தல் மற்றும் புத்தாண்டு விளையாட்டுக்களுடன் விசேட புத்தாண்டு நிகழ்வுகளையும் *Maggi* ஆரம்பித்துள்ளது.

எத்தனையோ தலைமுறைகளாக சுவை மற்றும் நலச்செழுமையுடன் நுகர்வோரின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து வந்துள்ள *Maggi*, அண்மையில் இடம்பெற்ற SLIM-Nielsen மக்கள் தெரிவு விருதுகளில் தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் 'வருடத்தின் மிகச் சிறந்த உணவு வர்த்தகநாமம்' என்று மக்களின் அமோக வாக்குகளைப் பெற்றுள்ளதுடன், இலங்கை மக்கள் *Maggi* மீது வைத்துள்ள தொடர்ச்சியான நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் இது அமைந்துள்ளது.